மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

O.S.No. 40 /2024

வாக்குமூலம்: வா.சா.1 – நித்யானந்தம்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

01.08.2025: சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 2, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இந்த வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகள் அரசாங்க அதிகாரிகள் என்பதால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு cpc பிரிவு 80 ன் கீழ் முன்னறிவிப்பு கொடுக்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. கடந்த 27.02.2023 ல் பழனி 2ம் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தான ஆவணமான வா.சா.2 சட்டப்படியாகத்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அந்த தான ஆவணம் பதிவதற்கு முன்பு கடந்த 13.01.2023ல் சின்னக்கலையம்புத்தூர் ஊராட்சியில் ஏகமனதாக தீர்மானம் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். 15.02.2023ல் பஞ்சாயத்து தலைவரால் தானப்பத்திரம் பதிவு செய்வதற்கு ஆட்சேபனையில்லை என்று ஊராட்சி மன்ற தலைவரால் சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் எனக்கு ஆட்சேபனை உண்டு என்று சான்று வழங்கினார்கள். மேற்படி என்னிடம் சான்று வழங்கியதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் என்னிடம் ஆவணம் உள்ளது. மேற்படி தானபத்திரத்தில் 1ம் பிரதிவாதி தனது நிலத்தில் 33,015 சதுரடி இடத்தை கிழமேல் ரோட்டிற்காக ஒதுக்கியுள்ளார் என்றால் ஒதுக்கியுள்ளது தெரியும் ஆனால் எவ்வளவு சதுரடி என்று தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு பதிந்து கொடுத்துள்ள கிரைய ஆவணப்படி சர்வே எண்151/2ல் உள்ள 3 செண்ட் நிலத்தையும் அதே

சர்வே எண்ணில் மேல் கோடியில் தென்வடலாக செல்லும் வண்டிப்பாதையில் உள்ள 700 சதுரடியும் சேர்த்து தானப்பத்திரம் பதிந்துளள படியால் வாதியான எனக்கு  எவ்விதப்பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் என் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசின் நலத்திட்டங்கைடளை பொது மக்களுக்கு அளித்திட ஊராட்சியால் அமைக்கப்பட்ட பாதையை தனிப்பட்ட முறையில் நான் ஆட்சேபனை செய்வதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் நான் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்தவரைக்கும் நிலத்தின் புவியியல் தன்மைகளை நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்து இயம்ப நீதிமன்ற ஆணையரை நியமிப்பதற்கு எனக்கு எண்ணம் உள்ளதா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.